உ

சிவமயம்



பருளாய்

சிவசுப்பிரமணிய சுவாமி

# தோத்திரக் கீர்த்தனையும்

*

# திருவூஞ்சலும்

இயற்றியவர் :

சுழிபுரம்

பாவலர் திரு. க. ஆறுமுகம் அவர்கள்

மூன்றாம் பதிப்பு

பதிப்பாசிரியர் :

புலவர் நா. சிவபாதசுந்தரம் அவர்கள்

சோபகிருது வருடம் பங்குனி மாதம்

1964

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# முகவுரை

## (இரண்டாம் பதிப்பு)

வெள்ளிய சரிகையெனத்தகும் திரைகளையெறியுஞ் சமுத்திர மாகிய பாக்குநீரிணையை வடமேல் பாகங்களிற் புடைவையாகச் சுற்றியும் இவள் பழங்கிழவி, யாளோ யெளவன ஸ்திரீயென்ற கெர்ச்சிதத்தினால் நீயினியெனக்கணித்தாயிருந்தென்பயன் இன்னுந் தக்கிணஞ்சேறியெனத் தொல்புரவூரைத் தென்றிக்கிலெற்றியும், சங்கென்னுந் தொகைகொண்ட யானைகளிவளிவர்ந்து செல்லு மூர்த்திகளென்றனுமானிக்கும்படியாகச் சங்கானைக்கு மேலாகத் தொற்றியும் விசேடம்பெற்ற சுழிபுர மாதானவள் ஆதிகாலந் தொட்டு மிகுமான்மியமுற்றிருந்தாளென்பதற்குப் பின்வருவன பூரண அத்தாட்சிகளாகும்.

பல்லாயிர வருஷங்களுக்கு முன்னரே இராவணசம்மாரஞ் செய்யும்பொருட்டு இராமசுவாமி இச்சுழிபுரத்திலுள்ளதும் தற்காலம் திருவடிநிலையென்னுங் காரணப்பெயராலழைக்கப்படுவதும் சமுத்திரதீரத்தில் சம்பிற்றுறைமுகத்திற்குச் சமீபத்திலுள்ளதுமாகிய மேற்படி ஸ்தலத்தில் வந்திறங்கினரெனவும் அதிலே தமது அடிச்சுவட்டைப் பதித்துப் போயினரெனவுமொரு விசேஷ சரித்திரமுண்டு. திருவடி நிலைக்கப்பெற்றமையின் திருவடிநிலை யெனப் பெயர் வந்தது. அத்திருவடி தற்காலங் கடலான் மூடப்பட்டிருக்கிறது.

பின்னொருகாலத்தில் இராமசுவாமி திருவடியைத் தெரிசிக்க வேண்டுமென்ற அவா பிடர்பிடித்துந்தப்பெற்ற சோழிய குமாரத்தியரெழுவர் மிகுந்த திரவியத்தோடும் பரிசனத்தவரோடுந் தந் தேயத்தைத் துறந்து திருவடிநிலைக்குச் சமீபமான துறைமுகமாகிய சம்பிலில் வந்திறங்கி மேலுந் திருவடியையத் தரிசித்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திர தீர்த்தமாடி ஆனந்தாவேசத்தராய்ச் சம்பில் என்றதின் மூலக்கருத்துணரப்பெற்றவர்களாய் (சம்பு - சிவன், இல் - ஆலயம்) அதிலோர் சிவாலயமெழும்பி அதற்குச் சற்றப்பாலுள்ள மழுவையென்னுமிடத்தில் தாங்கள் வசித்தற்கேற்ற மாடகூட கோபுரங்களை ஸ்தாபித்து அவற்றில் வசித்துவந்தனர். அங்ஙன முறையும்நாளில் மழுவைக்குச் சற்று அப்பாற் சமீபத்திலுள்ள பருளையில் தாங்களும் தங்கள் பரிசனத்தவரும் ஸ்நானஞ் செய்யும்படி எழுவரும் ஏழு கூபங்கள் தோண்டினுர்களென்றுங் கன்ன பாரம்பரியமுண்டு.

இச் சோழியகுமாரத்திகள் வசித்தமைபற்றிச் சோழியபுர மெனற்பாலது - சுழிபுரமெனத் தற்காலத்து மரூஉமொழியாய் வழங்குவதும் சம்பேச்சுரமென்னும் பேரோடு மேற்படி ஆலயம் அவ்விடத்திலிருந்தெடுக்கப்பெற்றுப் பருளை விநாயக, கந்தசுவாமி கோயில்களுக்கு வடகிழக்கே தாபிக்கப்பட்டிருப்பதும் மேற்படி மழுவையிற் பழைய கட்டிடங்களினழிவு காணப்படுவதும் மேற்படி ஏழு கூபங்களும் பருளைக் கந்தசுவாமிகோயிற் கணித்தாக வொருசேரக் கட்டப்பட்டிருப்பதும் அக்குமாரத்திகள் வந்து வாசஞ்செய்தனரென்பதைக் கரதலகமலம்போலத் தெள்ளிதிற் புலப்படுத்துந் தகுந்த சாட்சிகளாகும்.

இத்தகைய வனப்பு வாய்ந்த மாதின் சிரமாய் விளங்கும் பருளையிற் கோயில்கொண்டிருக்கும் சுழிபுர ஆதிவிநாயகமூர்த்தி தன் பின்ருேன்றலாகிய கந்தசுவாமியின் பக்கலிலிருந்து அடியாரிடர் நீக்குங் காட்சி மிகு மாட்சியானது! இவ் விநாயகமூர்த்தி மேலொரு பள்ளுப் பிரபந்தமும் பாடப்பட்டுள்ளது. பருளை விநாயகர், பருளைக் கந்தசுவாமி ஆலயங்கள் ஒன்றுக்கொன்று மிகவணித்தாயுள்ளன. இக்கந்தபிரான் தன்னை வணங்குமடியார்க்கு இகபர சலாக்கியங்களையினிதளித்து அதிசயவற்புதங்களைக் காட்டித் திருவிளையாடலைச் செய்வாராயினர். இப்பிரானருள் பெற்றவர் முக்காலத்துமுளர். அன்னேரில் இவ்வாசிரியரு மொருவராம். வித்தியாப்பியாசஞ் செய்யும் பருவம் வருமுன்னரே தானேயிவர் தந்தையாரிறந்துபோக "மாதா மரிக்கின் மகனுவி னற்சுவை போந், தாதா வெனிற்கல்வி தானகலும்" என்ற நீதிப்படி மூடசிகாமணியாகாது பிரயாசையோடு கல்விகற்றுச் சங்கீத சாகித்திய சம்பன்னராய்க் "கற்றதனுலாய பயனென்கொல் வாலறிவ னற்ருடொழா ரெனி" னென்ற வள்ளுவர் வாக்கை யநுசரித்துக் கற்றதின் பலனுகக் கடவுட்பத்தியுடையராய் அவரவர்க்கேற்ற நடையும் எவருங் கண்ணியப்படுத்தத்தக்கவுதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீலமுமுடையராய் வித்தியாதாரகராய்த் தமது பதினெட்டாம் வயதிலே ஒரு வித்தியாகழகத்தைத் தாபித்து அது தொடங்கி மூன்று தலைமுறையோருக்கு வித்தை பயிற்றி "எழுத்தறிவித்தவனிறைவனுகு"மென்றபடி தலைவராய் விளங்கப்பெற்றுக் கலைபயிற்றலையே சீவியகால விநோதமாகக்கொண்டு 73 வயதில் (அதாவது துன்முகி வருஷம் ஆனிமாசம் கஅ-ந் திகதி செவ்வாய்க்கிழமை) பரலோகப்பிராப்தியடைந்தனர்.

இவர் 50 வயதளவிலே நேத்திரரோகத்திஞற் பீடிக்கப்பட்டு வருந்தியபொழுது கந்தசுவாமிபேரிற் ருேத்திரமாகவே இக்கீர்த்தனையைப் பாடிமுடித்து அவ்வமயத்தினடந்த ரதோற்சவ தினத்திலரங்கேற்றினர். அதன்பின் அவருக்கு நேந்திரரோகந் தீர்ந்து இட்டசித்தியுண்டாயது. ஆகையாலிப்பதிகத்தைப் பாடி யநுதினமுஞ் சிந்திப்பவர்க்கு இச் சுப்பிரமணியப்பெருமான் திருவருளிஞற் சகல தீங்குமகன்று இட்டசித்தியுண்டாகுமென்பதெமதபிப்பிராயம்.

இத் தோத்திரக்கீர்த்தனை ஏறக்குறைய 28 வருஷங்களுக்கு முன்னரேயேயரங்கேற்றப்பட்டும் பிரகடனஞ் செய்யாது இது வரையுந் தாமதப்பட்டது யார்செய் தவக்குறையோவறியேம். இதையச்சிட்டுத் தரும்படியநேகராக்கியோனின் புத்திரர் ஸ்ரீ ஆ. கதிரித்தம்பியுபாத்தியாயரவர்களைக் கேட்டுக்கொண்டனராகையினவருமக் கருத்துகட்கிணங்கவேயிதனை வெளிப்படுத்தினர்.

இங்ஙனமாக அரிதில் மிகப்பிரயாசையோடு வெளிப்படுத்தப்பட்ட இவ்வரிய தோத்திரக்கீர்த்தனையென்னும் பெயருடைய தாய நூலானது பிற்றை ஞான்று வரவர அருகி அழிந்தொழியும் நிலைமைத்தாயிருத்தலிஞல் அதனை இரண்டாம் பதிப்பாக அச்சேற்றி உலகில் நிலவுமாறு செய்தற்கு இவ்வாக்கியோனின் இளைய பௌத்திரன், கதிரித்தம்பி ஆறுமுகமாகிய நான் எண்ணுகின்றேன். அங்ஙனமாய எனது எண்ணத்தை முருகப்பிரானருளைக்கொண்டு வாழும் நண்பர் அனைவரும் அப்பிரான் பெயரால் பாடி அருளப்பட்ட இந்நூலை வாங்கிப்படித்து மாயையாம் சிற்றின்பத்தை நீக்கிப் பெருமானருளால் பேரின்பவீட்டையடையுமாறு வேண்டுகின்றேன்.

. முன்னர்க் கூறப்பட்டபடி இவ்வாக்கியோனவர் தாம் நேத்திரரோகத்திஞற் பீடிக்கப்பட்டு வருந்தியபொழுது வேண்டுவார் வேண்டுவன ஈயும் அவ்விமலனை நோக்கித் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோகத்தை நீக்கி அருளுமாறு தோத்திரக் கீர்த்தனையைப் பாடி வழிபட்டார். அவர் வேண்டியவண்ணமே ரோகம் நீங்கும்படி அருள் கிடைத்தது.

இவ்வாக்கியோனுகிய பெரியாரின் கடவுள் பக்தியும் இதனுல் விளங்குமன்றோ. அவர் எங்ஙனம் அதைப் பாடி அருள் பெற்றனரோ அஃதேபோன்று மாயையாம் சிற்றின்பத்தில் அழுந்தியிருக்கும் நாமனைவரும் பாடி அவ்விறைவனருள் பெற்றுப் பேரின்பப்பெரும்பேற்றை அடைவோமாக. இன்னும் இவ்வாக்கியோனின் அடக்கம் அறிவு அனைத்தையும் நோக்குமிடத்து "ஆன்றமைந்த முற்றுணர்வோர் ஒன்றுமொழியாரே" என்றதற்கமையத் தமது கீர்த்தனையிலேயே "எழுத்துச் சொற்பொருளணி யாப்புடனலங்காரமேதும் அறியேன்" என்று கூறியிருக்கின்ருர் இதனுலும் அவரறிவு இத்துணையென்பது எளிதிற் புலப்படுமன்ரே. இன்னும் இவரது தீட்சணிய புத்திக்குஞ் சங்கீத சாமர்த்தியத்திற்கு மேற்கெனவே வெளிப்படுத்தப்பட்ட நளச்சக்கரவர்த்தி நாடகமே போதிய சான்ருகும். அதைக் கையேற்றுச் சிறப்பித்த கண்ணிய சீலர் இதுகாரியத்திற் பின்னில்லாதிருக்க வேலாயுதகரப்பிரான் கிருபைசெய்வாராக.

இங்ஙனம்

ஆக்கியோனின் பௌத்திரர்
கதிரித்தம்பி—சுப்பிரமணியம்
பிரசித்தநொத்தாரிஸ்

கதிரித்தம்பி—ஆறுமுகம்
ஐக்கிய மலாய்நாட்டுப்
புகையிரதவீதி உத்தியோகத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முகவுரை

## (மூன்றும் பதிப்பு)

தமிழ் இலக்கிய வரலாற்றில் பருளாய் விநாயகர் பள்ளுப் பிரபந்தத்தால் "பருளாய்" என்ற குறிச்சி நிலைபெற்ற இடத்தை எடுத்துக்கொண்டது. தெய்வவளமும் தமிழ்வளமும் தேங்கப் பெற்ற அக்குறிச்சியில் எழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணிய சுவாமி மீது அவ்வூர் கதிரித்தம்பி ஆறுமுகச் சட்டம்பியார் என்ற பாவலர் தோத்திரக் கீர்த்தனையும் ஊஞ்சலும் பாடி அருள் பெற்றுள்ளார். முருகஅருள் பெற்ற அப்பாக்களின் அழகைப் பற்றி நாம் கூறக்கிடப்பது என்னே! அவ்வருளே அதற்கு ஈடிணையில்லாப் பரிசாம்.

திரு. க. ஆறுமுகச் சட்டம்பியார் செய்யுள் இயற்றுவதில் வல்லுநர் என்பதற்கு அவர் எழுதிய நளச்சக்கரவர்த்தி நாடகம் என்ற நூலே தக்க சான்றாகும். இத்தகு ஆசிரியர் இசைத்தமிழிலும் அறிவு படைத்தவர். அத்துடனமையாது நாடக மேடைகளில் நடிப்பதிலும் புகழ் படைத்தவர், இராம நாடகத்தில் அவரும் ஒரு நடிகராக அமைந்து புகழ் பெற்றவர் என்று கூறுவர். இவ்வாறு இவர் முத்தமிழ் வல்லுநராய் நின்று சுழிபுரத்திற்கு செம்மைசேர் புகழை ஈட்டியவர். இத்தகு பாவலரின் அருமைப் பாட்டை மறக்காமல் அவ்வூரார் அவரின் நாடக நூலை மீண்டும் வெளிப்படுத்துதல் முக்கிய கடனாகும். ஈழத்து நாடகத்தமிழ் வரலாற்றில் அந்நூல் தக்க இடம் பெறும் என்பதை அதைப் படித்தவர் ஒப்புக்கொள்வர்.

இந்தத் தோத்திரக் கீர்த்தனையும் ஊஞ்சலும் மீண்டும் வெளிவர வேண்டும் என்பதை ஊக்கியவர் சுழிபுரம் கிராமச் சங்கத் தலைவராயிருக்கும் இளைப்பாறிய ஆசிரியர் திரு. சு. கந்தசுவாமி அவர்களும் இந்நூலாசிரியரின் பௌத்திரி அ. தெய்வானைப் பிள்ளை அவர்களும் என்க. அவ் அம்மையாரும் சிறுபணவுதவி செய்துள்ளார். மேலும், சுழிபுரம், இந்து சமய விருத்திச் சங்கமும் எம்மை ஊக்குவிக்கும் முகமாகப் பணவுதவி செய்துள்ளது. எல்லோருக்கும் பருளாய் சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருள் பாலிப்பதாக.

> திருவாய முத்தியையும் சித்தியையும் தீர்க்கப்
> பொருளாகும் அருளும் பெருமான் — உருவாய்
> சிவசுப் பிரமணியச் செப்புமெய் நாமம்
> தவமாம் பருளாய் தலத்து.

தமிழ் நிலை
தொல்புரம், சுழிபுரம்
4-4-1964.

இங்ஙனம்
நா. சிவபாதசுந்தரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்



பருளைக்

# கந்தசுவாமி பேரில்

# தோத்திரக் கீர்த்தனைகள்

## காப்பு

### விருத்தம்

திருமருவுகமலமலர்வயல்சூழுஞ்சுழிபுரஞ்சேர்தென்பருளை
அருளுருவமாகியுறைந்திடுகந்தசாமிதன்மேலன்புகூர்ந்து
மருவுமிசைச்செந்தமிழாற்ரேத்திரக்கீர்த்தனையையான்மரபிற்பாடக்
கருமருவுமடியர்துயர்நீக்குமுக்கட்கணபதிதாள்கருத்துள்வைப்பாம்.

## விநாயகர் துதி

1. இராகம் — கல்யாணி    தாளம் — அடதாளசாபு

பல்லவி

தந்திமுகக் கடவுள் தனதுபா தத்துணை
தானே யெனக்குத் துணை.

அநுபல்லவி

இந்திரை மகிழ்ந்துறை செந்தாமரைவயல்சூழ்
சுந்தரஞ்சேர்பருளை மந்திரந்தனிலேவாழ்    தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

திங்களைக்கங்கையைத் திகழச்சடையிற் சூட்டும்
சிவனுமுமையுமருள் செய்துகந்துசீ ராட்டும்
ஐங்கரப்பிள்ளையாய்வந் தமரர்குழுவை வாட்டும்
அன்பில்கயமுகத்து வன்பினன்றனை வீட்டும் தந்தி

பொன்னுலகத்தரசன் பூசைசெய்திட நட்ட
பூங்காவனம்வாடிப் புலருதெனவே முட்ட
அன்னவன்றுயர்நீங்க வகத்தியர்கையினிற் புட்ட
மாகிக்கமண்டலநீ ரவனிதனிலே விட்ட தந்தி

எந்தன்பவமுதலாய்ச் சிந்தையிலுறு மல்ல
லியாவுமகற்றுங்கந்த சாமிமீதினி னல்ல
சந்தவிசைதாளங்கள் தவருமலே புல்ல
தமிழாலேதோத்திரத் தசக்கீர்த்தனை சொல்ல தந்தி

2. இராகம் — தோடி தாளம் — ஆதி

பல்லவி

உந்தன்மேற் சொல்லுந்தசக் கீர்த்தனைத் தோத்திரத்துக்
குதவிசெய் தருளு மையா.

அநுபல்லவி

இந்திரன்முதல்வானோ ரேத்தும்பருளை வாசா
தந்திமகளுங்குறத் தையலுமகிழ் நேசா உந்தன்

சரணங்கள்

எழுத்துச்சொற்பொருளணி யாப்புடனலங் கார
மேதுமறியேன்தாள கீதமுறையுஞ் சேர
அழுத்துங்கருணைவாணி யருளினலன்பு கூர
அடியேனுரைத்தேன்பொல்லா மிடியும்பிணியுந் தீர உந்

போதவருணகிரி நாதர்முதலோர் பண்டு
புகல்தமிழ்க்குயிலோசை பொருவுமின்னிசை மண்டு
காதில்நானோதும்புன்சொல் காக்கையொன்றுவாய் விண்டு கத்துஞ்
சொல்லேயொத்தாலுங் கனிந்தசொல்லாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவனிடர்தீர்த்து வானரசீந்த வேலா
மலரோனைச்சிறைசெய்து மனித்தன்பால்விடுஞ் சீலா
ஆசின்மறைப்பொருளை யையனுக்கருள் பாலா
அடியார்செய்தபாவங்கள் பொடியாக்குமநு கூலா உந்

3. இராகம் — அசாவேரி தாளம் — ஆதி

பல்லவி

சரவண பவசிவ குருவென வனுதினம்
தான் நினைபேய் மனமே

அநுபல்லவி

திருவளர்மலர்வாவி செறியுங் கயல்கள் தாவி
சீதளநீர்வயன்மீதுளசங்கின மாதரளந்தரமோதுபருளைச் - சர

சரணங்கள்

ஊழ்வலி யால்வரும் பாழ்வினையெல்லாம் வீட்டும்
உற்பவக் கடலுக்குப் பொற்பாதப்புணை காட்டும்
வேள்கணையான் மனம் மாளாமலருள் கூட்டும்

விஞ்சிடு முலகின ரஞ்சிடுபாதகம்
அஞ்சு மனுகிடா தெஞ்சிட வோட்டும் சர

அலகைவினை மிருக மனுகாமலே காக்கும்
அவமிருத்துடன் றத்து நவகோளின்றீமை நீக்கும்
உலகினிற் பூரணயு ளோங்குசெல்வமுண் டாக்கும்

ஒன்னலர் செய்வினை மின்னனல் முன்வரு
பன்னலெனும்பரி சென்னவே போக்கும் சர

மனிதருறவு தன்னை யினிதென்று மகி ழாதே
வஞ்சகமாதர் செய்யும் மயலினிடையே காதே
கனவுதனிலாணுலுங் காணுதே தீதே

காலைகதிர்முதிரும் வேலையிருள்பரவும்
மாலைதனிலுமன்பி ஞல்மற வாதே சர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இராகம் — பைரவி தாளம் — மிஸ்ரம்

### பல்லவி

அஞ்சலஞ்சலென் றென்னைப் பா ரையா நீயல்லாமல்
தஞ்சம்வேறொருவ ரா ரையா

### அநுபல்லவி

கஞ்சமாமலர் வயற் பழனி வாழ்
கந்தா சௌந்தரி மைந்தா வுலகருள்
காரண பரிபூரண வுந்தன்
காட்சிவை தாட்சியில் மாட்சியுண்டாகவே அஞ்ச

### சரணங்கள்

குஞ்சரத்திரு முகனகமகி ழுஞ்சகோ தரா அன்பர்
குறைகளகற்றித் திறலுதவிடும் நிறைகிர்பாகரா
பஞ்சின்மெல்லடி வஞ்சி வள்ளி யுறை
பாகா கடம்பணி வாகா சராசரம்

படைத்தாயரு ளுடைத்தாய் பெற்ற
பாலற் கிரங்குதல் போலெற்கருள் புரிந் தஞ்சல்

சக்கரக்கர மாயவற்கன்பு மிக்கநன் மருகா பொதியந்
தன்னில்வாழ்முனிக் குன்னும்மறையைச் சொன்னமாமுருகா
கொக்குருக்கொளுஞ் சூரனுரத்தினைக்
கூறுசெய்தே சின மாறும்வை வேலவா

கோதிலாததேர் மீதிலே நிதங்
கூவியேமேவிடுஞ் சேவற்பதாகையா அஞ்சல்

சரவணபவகுக சண்முகா குருபரா வமலா வறுமீன்
தையலார்தனம் பெய்யு மமுதுண் செய்யவாய் நிமலா
கருமணிக்கிரி பொருவு மேனிக்
கலாபமயின்மீ துலாவிடும் பன்னிரு

கரனேசடாட் சரனே முரு
கையாமிடி நோயால் நையா தருதினம் அஞ்சல்

5. இராகம் — தன்னியாசி தாளம் — மிசுரம்

### பல்லவி

சரணமலர் பரவு மடியர் மிடியுடனே
சகல பிணியுமகலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அநுபல்லவி

கிரண வொளி விரவு மருண னெனவேமிளிர்
முரண வயில் கொள்கர பிரணவ முருகன் சரண

### சரணங்கள்

ஆலநிழன் முனிவர் நால்வருணரமறை
மூல முறை செய் தருளுஞ்
சூல கரசிரக பாலதரகரிய
நீல களனுதவு பாலகுமாரன் சரண

நாக வுலகர் தரையோக விரதருடன்
மாகர் கருடர் முகிலூர்
யாக பதியு மிரு பாகமருவிமகிழ்
வாக வணங்கு மயில் வாகவிசாகன் சரண

ஏழை யடியர் துயர் வேளையறிந்தவர்கள்
பீழை தணித்தருளு வோன்
தாழை மடலிலுறு பாளை கிழியவயல்
வாளை யுகழ் தருப ருளையில் வேளின் சரண

5. இராகம் — பியாகு தாளம் — திசரம்

### பல்லவி

கண்டு தெரிசனஞ் செய்பவருள்ளக்
கவலை யெல்லாந் தீரும்.

### அநுபல்லவி

மண்டல மெங்கும் புகழும் பருளையில்
வாசஞ் செயும்முரு கேசன்பொற்கோலத்தைக் கண்டு

### சரணங்கள்

சீர்கொள் கிரணரு ணோதயம் போலத்
திகழ்பொன் மணிமுடியும் எட்டுத்
திக்குக்கரிகள்தி டுக்கிடக் கூவிடுஞ்
சேவற் பெருங் கொடியும்

வார்சிறைச் சூர்ப்புள் வடிவைத் தடியும்
வாளும்பன்னிரு தோளும் பொன்னடியுங் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமக் கடம்ப மலரணி மார்புந்
தயங்கும் புரிநூலும் ஒளி
தங்குங்கருணை விழிக ளீராறுஞ் செந்
தாமரைப்பூப் போலும்

வாமமுகங்களு மிந்திரனும் மாலும்
வந்தித் திடுந்திருச் சுந்தரவேலுங் கண்டு

வானவர்சித்த ரியக்கர் கருடரும்
மாதவருங் கூடி தினம்
வாசஞ்செய் தாமரை வாவியின் மும்மல
மாசகல வாடி

மோனமுடன் செபஞ் செய்தன்பு நீடி
முன்னே வாழ்மயிற் சந்நிதி நாடி கண்டு

7. இராகம் — கமாசு தாளம் — ஆதி

### பல்லவி

நீயெனதுடலுறு பிணிதணித்தருள்வாய் மனதுதனிலிரங்கி
நீயெனதுடலுறு பிணிதணித்தருள்வாய்.

### அநுபல்லவி

தூயகமலமலர் வாயில் வருநறவு
பாயும் வயற்பருளைப் பதியிலுறைகுகனே நீ

### சரணங்கள்

பாதிமதி சடைமுடியணி பரனுமை பாலா
உரகர்நரர் சுரர்கள் பரவுகிரணபரி
புரவொலிசெறி தண்டைக் காலா
ஓதுமடியருள மீதுறு சீலா
உலகுறுபவவிரு ளொழியவொளிசெய் வேலா நீ

மானின் மகளிள வனமுலைதழுவிய நேயா
முனிசிறுவரறுவர் மயிலையுருவகல
நயமுடனே யருள்ச காயா
கானகக் கடம்பமலர் தானணி தூயா
கார்த்திகைமாதர் கனதனத் தமுதயில் வாயா நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிவடிவ சடாட்சர சூரசங் காரா
கரியமணியினொளி கலவுகலபகுல
மயிலின் மிசை யுலவொய் யாரா
ஏதமறு மறையி னுதகு மாரா
வெதுவெது நினையினு மதுவதுவுதவுப காரா நீ

8. இராகம் — சங்கராபரணம் தாளம் — ஆதி

பல்லவி

உந்தன் பாதார விந்தந்தானே நம்பினேனையா
வுந்தன் பாதார விந்தந்தானே.

அநுபல்லவி

இந்திரன் புகழ்பருளை மந்திரந்தனி லேவாழுங்
கந்தாவுகந் தெனது சிந்தாகுலந் தீர்த்தாள்வாய் உந்த

சரணங்கள்

மெய்யா விளங்குமயிற் கையா மிடியும்நோயும்
நையா தெனைப்புரப்பா யையா நநன்புதல்வா உந்த

வேதா கமப்பொருளி னுதா வினையேன்செயும்
தீதா னவைபொறுத்துத் தாதாபெருங்கருணை உந்த

சேந்ததெய் வானைவள்ளி காந்தா திருக்குறிஞ்சி
வேந்தா வெனக்குவர மீந்தா தரவுசெய்வாய் உந்த

9. இராகம் — மோகனம் தாளம் — ஆதி

பல்லவி

ஆநந்தக் கூத்தாடல் கண்டேனே — பருளைதன்னி
லாநந்தக் கூத்தாடல் கண்டேனே.

அநுபல்லவி

ஆநந்தக் கூத்தாடல் கண்டேன்
அகத்துய ரெல்லாம் விண்டேன்

அம்புயன் மாலுட னும்பர் வணங்கிடும்
வம்பவிழ் செய்யக டம்பணியும்வேள் ஆநந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதத்திற் சிலம்பு கிலுங்க சூரியர்கள்போற்
பன்னிரு குழையுங் குலுங்க
மாதவர் மலர் தூர்க்க
மகிழ்ந்து நால்வேத மார்க்க

வாசவன்முதலிய வாசையுளோர்துதி
பேசிட மாமுரு கேசனன்பாக ஆநந்தக்

கோலமுத்து மாலைகள் மின்ன அடியவர்கள்
கூடியிசை பாடியே துன்ன
பாலமிசை விசையப்
பட்டிகைப்பணி யசையப்

பங்கினிலுறையர மங்கையும் வநசரர்
நங்கையு மிகமகி ழுங்குமரேசன் ஆநந்தக்

மத்தளங் கைத்தாளங் கலிக்க சத்துருசங்கார
வடிவேல் கரத்திற் சொலிக்க
சுத்தவெண்சங்க மூதத்
தொண்ட ராறெழுத் தோதச்

சுந்தர மாமறை யந்தணர் பூசனை
தந்திடநாளும கிழ்ந்தருள் கந்தன் ஆநந்தக்

10. இராகம் — நாதநாமக்கிரியை தாளம் — ஆதி

பல்லவி

தேரிலெழுந்து செவ்வேள் வரும்பவனியைக் கண்டாற்
தீயவினைகள் தீருமே.

அநுபல்லவி

பாரிலொருதலமும் நேரில்மருதவயல்
நீரிலுறும் வநசம் ஊருமின வளைகள்
பாரவருகுதனி லீரநிலவு மிழும்
ஆரமணி சொரி பருளையின மருகில்
பத்தி மிகுத்த குணத்துட னற்பரி
சுத்த மலர்ச் சரணத்தை வழுத்திடு
பத்தர் மனத்தி னினைத்த வரத்தினை
மெத்தருள் வைத்திடு சித்தமதாக தேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணங்கள்**

வச்சிரமணி யுருளைகள் பூட்டி நீல
மணியிலணிபெறு மச்சுகள் மாட்டி
பச்சைமணிப் பலகைப்பா வோட்டித் தட்டுப்
பரிக்கப்பவளக் கடிகைகள் நாட்டி
வாய்ந்திடுங்கோமேதகத்தி
லாய்ந்தெடுத்தச் சுருவாணி
வகைவகையாக மருவுறப் போக்கி
யேய்ந்திடுங்கொடிஞ்சிவெயில்
காய்ந்திடும் வைடூரியத்
திசைவுற வசைவற வெழி லாக்கி
மாந்தர்புகழும் மாணிக்கத்
தாந்தகவினுலே யொளி
வயங்கிடும்படி கிடுகள் வீக்கி
பூந்தளப்பது மராகத்
தூந்தனிக்கூம்பமைத் தெங்கும்
பொருந்தத்திருந்த முத்துச்சரந் தூக்கி
மாசில்பசும்பொனிற்றே வாசனம் வகுத்து
வளமலி வுளபது மாசனம் பகுத்து
தேசுறுமணிகொள்சிங் காசனம் அடுத்து
திடத்தொடு கூவிடுங் குக்குடக்கொடி தொடுத்து
மாதுங் கத்தொளிர் செங்கனகக் கிரி
ஓதங்கத் திறல் தங்குதிசைக் கரி
வாவுஞ் செம்ப வளக்காலின் கதி
மேவுங் கந்துக மயனூலின் விதி
வைத்திடு பத்தி யிடத்தி னிரைத்துல
கத்து மரத்தொழில் வித்தகர் மட்கிட
மற்றுளர் சித்த மதித்திட மாமய
னுத்திடு பிணைவன்வி தித்திடு சித்திர தேரிலேழுந்து
வேலே துயிலரியும் வா ரீச மலர்
மேலுறை பிரமனுந் துதி பேச
மேலே யுலகு தனிலே வாச முறு
சீல வரசன் கவரிகள் வீச
வேத்திரக் கரத்தர் மிக
வார்த்துநய வார்த்தை சொல்லி
விசைய கட்டியமொழி யிசை படிக்க
மாத்திரை யுடன் பரத
சாத்திர முறைமே னகையூர்
வசிமுதலான வரம்பையர் நடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்றலத் துலவி யிருள்
சீத்திடுங் கதிர வனும்
விளங்குஞ் சந்திரனும் வெண்குடை பிடிக்க
ஆற்றிடுந் தவ வடியர்
போற்றிசெய் தரகர வென்
றன்புடனே யாநந்தக் கண்ணீர் வடிக்க
வேலையிறையும் பவனனும் மெதுவாக
ஆலவட்டம் விசிறியசைத்தரு கேக
காலனுடை வாளினைக் கரத்தினில் வாங்க
வேலுந்நிதிக் குபேர னெழில்கொ ளடப்பை தாங்க
வீழுஞ் செஞ்சடை யெழுமுனி வரர்களும்
நாளும் பதமலர் தொழுதிடு சுரர்களும்
வேதஞ் சொலியுறு திசைகண் மறைத்திட
மாதண்டரு மலர் வாரி யிறைத்திட
விட்டுவில் வீசிய சுட்டி யணிந்துயர்
பட்டுடை கட்டு திருக்கணன் மங்கல
மெட்டுமமைந்துள தட்டுகள் கைகொடு
வட்டணையா யெதி ரிட்டயல் வரவே தேரிலெழுந்து
ஆகுளி பேரிகை மணி சிலம்பத் துடி
காகளங் கோடு சின்னமும் புலம்ப
ஆனக முழவு சல்லரி யுலம்பக் கிணை
தானுந் தண்ணுமை பதலையு மலம்ப

அண்டத்திலுள்ளோரும்நவ
கண்டத்திலுள்ளோரும்வந்
தஞ்சலிசெய்தானந்தக்கூத் தாட
மண்டித்திசையெங்குஞ்சிவ
தொண்டத்தொகையோர்கூடி
மகிமைத்திருப்புகழினிசை நீட
அந்தத்தந்திரிதத்தண்டங்கை
தந்துற்றிடுநாரதரும்
அரியகின்னரருமேழிசை பாட
சந்தத்தூபதீபங்கொண்டு
வந்தித்தரிச்சனைசெய்து
கலைவல்லவேதியர்கள்கொண் டாட
அங்குசமுஞ் சரமுங் குலிசமுங் கொடியும்
அணியபயமும் அயில் செறியுடம் பிடியும்
பங்கயமும் மணியும் பகைவரை வெல்லும்
பரசுந்தண்டமு மருள் வரதமும் வில்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுஞ்செங்கையிராறுதுலங்கிட
மாகஞ்சமலரின்விழிகளிலங்கிட
ஆருங்கருணைமுகங்கள்விளங்கிட
வீரஞ்செறிகழல்தாளில்முழங்கிட

அஞ்சுக மஞ்சுமருஞ் சொல் தருங்குற
வஞ்சியு மெஞ்சிடை யுஞ்சிறு பஞ்சடி
அஞ்சன விழியு முறுஞ்சுர ரிறையருள்
குஞ்சரியு மிருபுறஞ் செறி வுறவே.

**11.** இராகம்—மத்தியமாபதி தாளம்—அடதாளசாபு

### பல்லவி

வரந்தாரு மெனக் கையனே பருளைவாழ்
வடிவேன் முரு கையனே

### அநுபல்லவி

பொருந்துமடியேனுன்னைப் போற்றிடுங்கீர்த்தனைகள்
புன்சொல்லாயிருந்தாலு நன்சொல்லாகவேகொண்டு வரந்

### சரணங்கள்

எந்தப்பிணியும் நீங்கவும் ஐசுவரியங்க
ளிருநாலுமிகத் தேங்கவும்
சிந்தைதெளியுங்கல்விசெயமறி வோங்கவும்
சிறுமையெல்லாந்தீர்ந்துசெழுங்கிளை தாங்கவும் வரந்

வாக்குப்பிழைப டாமலும் தீவினைவழி
மனதைச்செல்லவி டாமலும்
ஊக்கமானசெயலொன்றுங்கெ டாமலும்
ஓங்குங்கிரகங்களின்றீங்குற்றி டாமலும் வரந்

தன்மத்தைத்துற வாமலும் அவமிருத்து
தனிலேயிற வாமலும்
இன்னவானசென்மத்தினும்பிற வாமலும்
எந்நாளுமுந்தளடியிணையைமற வாமலும் வரந்

ஆனந்தணர் தழையவும் பாடினோர் கேட்போர்க்
கருள்செய்துள்ளங் குழையவும்
மானவரசர்கண்மன்னுயிர்துயர் களையவும்
மாதமும்மாரிபெய்துமகிதலம் விளையவும் வரந்

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகக்கடவுள் துணை

## சுழிபுரம் பறுளைக்

# கந்தசுவாமி பேரில்

## ஊஞ்சல்

சீர்மேவு செங்கமல நங்கை நாளுஞ்
சேர்ந்தருளே கூர்ந்துவளர் பறுளை வாழும்
வார்மேவு கொங்கைவள்ளி பங்கர் தம்மேல்
வாஞ்சையொடு மூஞ்சலிசை வாழ்த்தி யேத்த
ஏர்மேவு கங்கையொடு திங்கள் சூடு
மெங்கள்சிவன் சங்கரியொ டினிதி னீன்ற
தார்மேவு செஞ்சடைக் குஞ்சர முகன்பொற்
சரணமல ரனுதினமுஞ் சரணந் தானே. 1

அத்தமலை யுதயமலை தம்ப மாக
வழகியபொன் மேருமலை விட்ட மாக
மெய்த்துநிக மாகமங்கள் கயிற தாக
மிக்கதொரு பிரணவமே பலகை யாக
வத்திரநே ரொத்தவிழி மாதர் பாட
வானைமகள் வள்ளியுட னருகே கூடப்
பத்திசெறி யடியர்தொழ வாட லூஞ்சல்
பறுளையுறை கந்தரே யாட லூஞ்சல். 2

தங்கநவ ரத்னமுடி சிரசின் மின்னத்
தயங்கியகுண் டலங்கள்செவி சார்ந்து துன்னத்
துங்கமிகு செங்கதிரோ ரனந்த கோடி
துலங்கியெழுந் தனமேனி சொலித் திலங்கப்
பொங்கியொளி தங்கியபொற் பதக்க மென்னப்
புண்டரிக நேர்கழலிற் றண்டை யார்ப்பப்
பங்கிலிரு மகளிரொடு மாட லூஞ்சல்
பறுளையுறை கந்தரே யாட லூஞ்சல். 3

வட்டமதி முகத்தவர்கள் வடந்தொட் டாட்ட
வானவர்பூ மழைபொழிந்து வணங்கி யேத்தச்
சிட்டர்தொழ வடியர்பல் லாண்டு கூறச்
சித்தரொடு கின்னரர்கள் சேர்ந்து பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டதிசை யும்மதிரக் கலைக ளார்ப்ப
வருமறையோர் வேதவொலி யாங்கு போர்ப்பப்
பட்டமொடு சுட்டிமின வாட ளூஞ்சல்
பருளையுறை கந்தரே யாட ளூஞ்சல். 4

இந்திரவி யிருபாலுங் கவிகை தாங்க
வியமனுடை வாளதனை யெடுத்தேயோங்க
கந்தவகன் மடையதனைக் கடிதே வாங்கக்
கடல்வருணன் சிவிறியினீர் கையிற் றூங்க
வந்தணர்க டிசையளக்கு மாசி தேங்க
வடியர்துய ரவைமுழுது மகன்றே நீங்கப்
பந்துமுலை யவர்களிரு பாலும் வீங்கப்
பருளையுறை கந்தரே யாடளூஞ்சல் 5

தருணரவி முகவொளிக டயங்கி யாடச்
சலசமலர் விழிக்கருணை தானு மாட
விரிகிரண மதாணியொடு கண்டி யாட
வெற்றிபெறு மாயுதம்வை வேலொ டாட
வருமறைநூன் மார்பதனி லசைந்தே யாட
வங்குலியின் விரலணிக ளவையு மாடப்
பருமணிக்கிண் கிணிசிலம்பு பாதத் தாடப்
பருளையுறை கந்தரே யாட ளூஞ்சல். 6

கங்கைமழை பொழிவதுபோன் மலர்கள் தூற்றக்
கடவுளர்கள் முனிவரொடு கலந்தே தோற்றச்
சங்கமுறு புலவரென வெவருஞ் சாற்றத்
தந்திரியாழ் கின்னரரர்கள் தடவி யேற்றத்
தங்குமா காமியங்க டன்னை மாற்றச்
சார்தருசஞ் சிதவினைக டனையு நீற்றப்
பங்கமில்சீ ரடியர்திருப் பணிக ளாற்றப்
பருளையுறை கந்தரே யாட ளூஞ்சல். 7

அருகியெழு சிறுதென்றல் முன்றில் கூட்ட
வங்கிநறு மணப்புகைக ளவற்றையூட்ட
முருகவிழ்நற் பனிநீரை முன்பு காட்ட
முந்திவரு கற்பூர தீப நீட்டப்
பிரிவிலணி பலவொளிக ளிருளை யோட்டப்
பெறுகருணை வழிபடுவோர் வினையை வாட்டப்
பரிதியென விழிக்கடைநல் லன்பு பூட்டப்
பருளையுறை கந்தரே யாட ளூஞ்சல். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்புருகின் னரமிதுன மிசைகள் கூடச்
சங்கிஞெடு தாரைசினந் தயங்கி நீட
வும்பருள துந்துபியைந் திசைகள் மூட
வோங்குதரு நறுமலர்க ளுவந்தே போட
வம்புசெறி குழன்மடவார் கீதம் பாட
வாழ்த்தடியை நின்னடியர் வந்து தேடப்
பம்புமொழி யரமகளிர் நட்ன மாடப்
பருளையுறை கந்தரே யாட ரூஞ்சல். 9

தந்திமுகன் றம்பியரே யாட ரூஞ்சல்
சண்முகசுந் தரமுருக வாட ரூஞ்சல்
ஐந்துமுகன் றந்தவரே யாட ரூஞ்ச
லாதிபரை யீன்றவரே யாட ரூஞ்சல்
செந்திருமான் மருமகனே யாட ரூஞ்சல்
தேவசேனுபதியே யாட ரூஞ்சல்
பந்தவினை யொழிப்பவரே யாட ரூஞ்சல்
பருளையுறை கந்தரே யாட ரூஞ்சல். 10

அந்தணரு மாவினமும் வாழி யூழி
யருமறையு மாகமமும் வாழி யூழி
மந்தரநற் சிவசின்னம் வாழி யூழி
மாதவரு மன்னவரு மழையும் வாழி
வந்துதொழு மடியவர்கள் வாழி யூழி
வைதிகநற் சைவநெறி வாழி யூழி
பந்துமுலை வள்ளிதெய் வானை வாழி
பருளையுறை கந்தரடி வாழி யூழி

இராகம் — ஆனந்தபைரவி

## பத்தியம்

தாதுசெறி சோலைகொண்ட வேலி சூழுந்
தண்பணையி னத்தினங்கள் முத்தை யீனப்
போதுகொண்ட குவளைகக்குந் தேனை வண்டு
புக்கருந்தி மிக்கவெறி தக்க செல்வ
நீதிகொண்ட சுழிபுரத்துப் பருளை மேவு
நிமலஞான சத்தியிச்சை நெறியிற் போற்ற
வாதிதந்த குமரனறு முகத்து வள்ள
லழகிஞெடு வீற்றிருந்தங் கருளு வானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி.

கொச்சைக்குறமகள்வள்ளி யிச்சைகொளும்லீலா
செச்சைமலர்மாலையணி வச்சிரநன்மார்பா—லாலி
பந்துமுலைவள்ளிபுணர் செந்திருநன்மார்பா
கந்தனெனவைந்துமுகர் தந்தருளொய்யாரா—லாலி
அந்தரத்தினிமையவர்கள் சிந்தையுறைசீலா
கந்தமலர்ப்பருளைநகர் வந்தருளும்வாசா—லாலி
அட்டதிக்குமுனதுபுக ழெட்டும்வடிவேலா
குட்டியயன்சிறையிருக்க விட்டுதைத்தகாலா

### வேறுலாலி

வீரசூரா வெட்சித் தாரசீரா திரு
மாரனேயொய் யாரமுறு பாதிதீரா—லாலி
சூலவேலா நல்ல கோலகாலா வுமை
பாலனென வந்துதித்த மூலசீலா
ஆதிநாதா நல்ல வேதபோதா மனு
நீதிவழி யயற்குப தேசபாதா—லாலி
காளகண்டர் தந்தசெச்சை மாலைத்தோளா பருளை
வாழுமடியார் வினைகள்போழுந் தாளா—லாலி

### வேறுலாலி

சங்கினங்களூர்ந்துவயற் சங்கருகேமுத்தீனும்
பங்கமில்சீர்ப்பருளையுறை செங்கதிர்வைவேலோனே—லாலி
மந்திரமாமறைப்பொருளே மாதவத்தோருளத்திருளே
சிந்திடவந்தவர்க்கருளே செய்திடுவாய்பரம்பொருளே—லாலி

---

### பராக்கு

ஆதிசிவனருண்மகவா யடைந்தாய்பராக்கு
அன்றவற்குச்சிவகுருவா யருள்வாய்பராக்கு
சோதிவடிவேலெடுத்துத் தொடர்ந்தாய்பராக்கு
சூரனுயிர்தனைவதைத்த வீராபராக்கு
தாரகனைமலையினொடு தடிந்தாய்பராக்கு
தரியலரைநீருகச் சமைத்தாய்பராக்கு
வானவரைச்சிறைமீட்டு வைத்தாய்பராக்கு
வளமைசெறிபருளைநகர் வதிந்தாய்பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

சீராரரமாஞூர்மகிழ் தேவேயெச்சரிக்கை
சிவஞரருண்மகவாய்வரு செல்வாவெச்சரிக்கை
ஏரார்திருமுகமாறுள விறைவாவெச்சரிக்கை
இமையோர்தனைச்சிறைமீட்டிடு மேந்தாலெச்சரிக்கை
வாரார்முலைமாஞூர்மகிழ் வரதாவெச்சரிக்கை
வடிவார்மயிலொடுசேவலை வைத்தாயெச்சரிக்கை
பாரோர்புகழ்சுழினைப்பதி வதிவாயெச்சரிக்கை
பல்லோர்தொழுபருளைப்பதிப் பரமாவெச்சரிக்கை.

—oo:o:oo—

## மங்களம்

9 இராகம் - மோகனம் தாளம் - ஆதி

### பல்லவி

மங்களம் மங்களம் நித்தியசெய
மங்களம் மங்களம்

### அநுபல்லவி

மங்கையுமை பாலருக்கு மருவுமிசை வேலருக்கு
மெங்கும் பரிபாலருக்கு மிசைபருளைச்சீலருக்கும் மங்

### சரணங்கள்

வள்ளிதெய்வ யானையர்க்கு மன்னுமுரு கேசருக்கு
மெள்ளிவரு சூரனுயி ரின்றெனச்செய் தேசருக்கும் மங்
ஆறுமுக வத்தனுக்கு மையனரு ணித்தனுக்கும்
வீறுகேத னத்தனுக்கும் விண்ணவர்கண் முத்தனுக்கும் மங்
தும்பிமுகர் தம்பியர்க்குந் துய்யதொரு தும்பியர்க்கும்
நம்பினவ ரம்பியர்க்கு நன்மையரு ணம்பியர்க்கும் மங்

—oo:o:oo—

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்கவெற்பைக்
கூறுசெய்தனிவேல் வாழ்க குக்குடம்வாழ்கசெவ்வே
ளேறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கும்வாழ்க
மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியரெல்லாம்.

—கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்.

—oo:o:oo—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு:

கலைவாணி அச்சகம்,

10, மெயின் வீதி,

யாழ்ப்பாணம். 9—64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org